மாதந்தோறும் வெளியாகும் இலக்கிய குடும்ப மாத இதழ்

மலர் - 78 இதழ் - 4

# கலைமகள்

ஏப்ரல் 2010

விலை ரூ.15




## டெண்டுல்கருக்கு பாரத ரத்னாவா?









## ஆண்களுக்கும் வேண்டுமா இடஒதுக்கீடு?



## கணினி மேதை 'காம்கேர்'

# கே. புவனேஸ்வரி

பெண்களில் பலர் கணினிக் கல்வி கற்று, கை நிறைய சம்பளம் வாங்கி, வளமான வாழ்க்கை நடத்துகின்றனர். எனினும் கணினித் துறையில் தடம் பதித்து, சாதனைகள் புரிபவர்கள் மிகச்சிலர். அவ்வகையில் கணினியியலே வாழ்க்கை என்று முத்திரை பதித்துச் சாதனைகள் புரிபவர் காம்கேர் கே.புவனேஸ்வரி.

எம்.எஸ்.ஸி, முடித்தவுடன் மிகுந்த துணிச்சலுடன், ''காம்கேர் ஸாஃப்ட் வேர் பிரைவேட் லிமிடெட்'' என்ற நிறுவனத்தைத் தொடங்கி, *1992* முதல் அதனை வெற்றிகரமாக நடத்தியும் வளர்த்தும் வருகிறார் புதுமைப்பெண் புவனேஸ்வரி.

கடந்த பதினேழு ஆண்டுகளாக இந்நிறுவனத்தின் வழியே பல்வேறு நிறுவனங்களுக்கான வெப்சைட் டிசைனிங் செய்து கொடுத்ததுடன் அவற்றுக்கு 500 மென்பொருட்களையும் உருவாக்கி அளித்துள்ளார்.

தனது மல்டிமீடியா ஸ்டுடியோவின் வழியே குழந்தைகள், மாணவர்கள் மற்றும் பெரியோர்களுக்கான கார்டூன் - அனிமேஷன் குறுந்தகடுகள் வெளியிட்டு வருகிறார். அவ்வகையில் எழுநூறுக்கும் மேற்பட்ட மல்டிமீடியா குறுந்தடுகளை வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளார்.

தொலைக்காட்சி சேனல்களில் அவ்வப்பொழுது தோன்றி எளிய தமிழில் கணினியியல் குறித்த பாடங்களைப் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் நடத்தி வருகிறார். குறும்பட கிரியேட்டிவ் இயக்குநராகவும் விளங்குகிறார். ''அன்புள்ள அப்பா அம்மாவுக்கு'' என்ற குறும்படத்தை அண்மையில் இயக்கியுள்ளார்.

கிராமப்புறங்களிலிருந்து படித்துப் பட்டம் பெற்று சென்னைக்கு வருகின்ற மாணவ மாணவிகளுக்கு வேலைவாய்ப்புக்கு உதவுகின்ற கன்ஸல்டன்ஸி மற்றும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறார்.

அவ்வப்பொழுது கிராமப்புறங்களிலுள்ள கல்லூரிகளுக்குச் சென்று கேரியர் கைடன்ஸ் ஒர்க்ஷாப்புகளையும் நடத்துகிறார். ஆயிரக்கணக்கானோர் இவரிடம் பயிற்சி பெற்று கணினித் துறையில் பிரகாசித்து வருகின்றனர்.

தமது அறிவியல் பதிப்பகத்தின் வழியாகவும் சில முன்னணிப் பதிப்பகங்களின் வழியாகவும் ஐம்பதுக்கும் மேற்பட்ட கணினி நூல்களை அதிகப் படங்களுடன் எளிய தமிழில் வெளியிட்ட ஒரே எழுத்தாளர் காம்கேர் புவனேஸ்வரி என்று கண்ணதாசன் பதிப்பகம் பாராட்டியுள்ளது.

**காம்கேர் நூல்களே காலத்துக்கு ஏற்றவை**
**முன்னேறத் துடிப்பவர்க்கு மூலதனம் போன்றவை**
என்று பருத்தியூரார் கவிதை நடையில் பாராட்டியுள்ளார்.

நிறுவன மேலாண்மை இயக்குநர், சாஃப்ட்வேர் வல்லுநர், மல்டிமீடியா அனிமேஷன் தயாரிப்பாளர், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர், குறும்பட கிரியேட்டிவ் இயக்குநர், சமூக ஆர்வலர், எழுத்தாளர், நூலாசிரியர், பதிப்பாளர், அறக்கட்டளை அமைப்பாளர் என்று தசாவதாரம் எடுத்துள்ள சாதனையாளர் புவனேஸ்வரி. அண்மையில் தனது அமெரிக்கப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துத் திரும்பியுள்ளார்.

எங்களிடம் இலக்கியமும், ஆன்மிகமும் பயின்று வரும் புவனேஸ்வரி, ஆன்மிகக் கட்டுரைகள் எழுதத் தொடங்கியுள்ளார். விரைவில் ஆன்மிக மேடைகளிலும் அசத்தப் போகிறார் காம்கேர் புவனேஸ்வரி.

**தகவல்: டாக்டர் ஹேமா சந்தானராமன்**